# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 13 (LW 27)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கலையரசன் | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | தேதி | 12.02.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் எரியோடு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது 07.05.2021 அன்று திண்டுக்கல் தலைமை அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற இன்டிமேசனை பெற்று அதிகாலை 03.00மணிக்கு சென்று சிகிச்சையிலிருந்த நத்தம் போசுகுறிச்சி, கம்பிளியம்பட்டியை சேர்ந்த சின்னக்கண்ணு மகன் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்தாக பத்மாதேவியிடம் பெற்றேன். பின்பு நிலையம் காலை 06.00மணிக்கு வந்து நிலைய குற்ற எண். 300/2021 இதச பிரிவுகள் 294(b), 323, 427, 307 இதசவாக வழக்கு பதிவு செய்தேன்.நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7, ஆகும். பின்பு வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து இன்டிமேசன் வந்தது. அந்த இன்டிமேசனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. அந்த இன்டிமேசனில் 2 அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது காயம்பட்ட பன்னீர் செல்வம், ரமேஷ் அடையாளம் தெரியாத 2 நபர்களால் தாக்கப்பட்டதாக சொன்னேன். வாக்குமூலத்தை 03.30 மணி முதல் 04.30மணி வரை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து பதிவு செய்தேன். எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தேன் என்ற விவரத்தை புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார்தாரரை விசாரித்த போது அடையாளம் தெரியாத 2 நபர்களால் தாக்கப்பட்டதாக சொன்னார் என்றால் சரியல்ல. புகார்தாரர்

அடையாளம் தெரியாத 2 நபர்களால் தாக்கப்பட்டதாக சொன்னார் என்றாலும் பின்னிட்டு எதிரிகள் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் புகார்தாரர் தன்னை 2வது எதிரி தன்னை முதுகில் அடித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. கையால் மாறி , மாறி அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது. புகாரில் அ.சா.1. தனக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லப்படவில்லை. அ.த.சா.ஆ.1ல் சம்பவம் நடந்த கிராமத்தின் பெயர் கோவிலூர் கிராமம் , ஆனால் கோவிலூர் கிராமம் என எழுதவில்லை. புங்கம்பாடி பிரிவு என குறிப்பிடப்பட்டுள்ளது அது கிராமத்தை குறிக்காது என்றால் சரியாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அது வெம்பூர் கிராமம் ஆகும், புங்கம்பாடி பிரிவு. நான் வெள்ளை தாளில் புகார்தாரரிடம் கையெழுத்து வாங்கி கொண்டு பின்னிட்டு நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:14:48 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.